தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-4] திபி.2017 சிலை (31-1-1987) 85 காசுகள் [இதழ் எண்: 79] [பகுதி 39-40

ஆப்பிரிக்க விடுதலைக்கு உதவுவது போல் ஒருபுறம் உலகை ஏமாற்றிக் கொண்டு, மறுபுறம் இலங்கைத் தமிழின அழிவை மறைமுகமாக ஊக்கப்படுத்தும் இராசீவ் காந்தியே, நீங்கள் தலைமையமைச்சர் பதவியை விட்டு உடனே நீங்குங்கள்!

இந்தக் கோரிக்கையைத் தொலைவரி வழி அனுப்புங்கள்!

பாவலரேறு அறிக்கையும் வேண்டுகோளும்!

'தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும்' என்னும் பழமொழி திரு. இராசீவ் காந்தியைப் பொறுத்தமட்டில் நூற்றுக்கு நூறு உண்மை என்பது அவர் பதவிக்கு வந்த ஓராண்டுக் காலத்திற்குள் நன்கு தெரிய வந்த செய்தி என்றாலும், இக்கால் அது நூற்றுக்கு இருநூறு மடங்கு உண்மை என்று ஆகி வருகிறது.

தம்மை நாட்டு மக்களிடம், அன்றாடம் நன்கு விளம்பரப்படுத்திக் கொள்வதிலும் உலக நாடுகளுக்கு அடிக்கடி தாம் சென்று, அந் நாடுகளுடன் இணக்க உணர்வு வைத்துக் கொள்வதிலும், அந் நாடுகளின் தலைவர்களை அடிக்கடி இந்தியாவுக்கு அழைத்து அவர்களின் மனப்போக்குக்குத் தகுந்தபடி விருந்தளித்தல், பாராட்டுதல், பரிசளித்தல், ஒப்பந்தங்கள் செய்து கொள்ளுதல் முதலிய அரச தந்திரங்களைக் கையாள்வதிலும், இந்திரா காந்தி கற்றுக் கொடுத்ததற்கு மேலும் பல மடங்கு உத்திகளைக் கையாண்டு, இன்று உலகத்தலைவர்களில் ஒரு தனிச் சிறந்த இடத்தைப் பெற்று வருகிறார். இந்த நிலைகள் பற்றி இக்கால் நாம் ஒன்றும் கூறுவதற்கு விரும்பவில்லையேனும், அவர் இவ்வாறு தம்மை வலுப்படுத்திக் கொண்டு, ஒரு வல்லாண்மை மிக்க தலைவராக ஆகி இவ்விந்திய நாட்டில் உள்ள அனைத்துத் தனித் தேசிய இனங்களையும் அழித்து ஒழித்துவிட்டு, அனைவரையும் ஒரே இந்தியத் தேசிய இனம் என்னும் செயற்கைக் கட்டுக்குள்ளே கொண்டுவர நினைக்கும் கரவான முயற்சியைத்தான் நாம் பலவாறு கண்டிக்க வேண்டியுள்ளது.

உலக மக்களைக் கவர்கின்ற நோக்கில் அவர் ஆடிக்கொண்டிருக்கும் அரசியல் நாடகங்களிலேயே தலைசிறந்தவையாக இருப்பவை, தென்னாப்பிரிக்க இனவெறி அரசின் நடவடிக்கைகளைக் கண்டிக்கின்ற முறையில் அவர் எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளும், இலங்கை இனச் சிக்கலுக்குத் தீர்வு காணுதற்கென்று அவர் செய்து வருகின்ற சிற்சில வெளிப்படையான, மறைமுகமான செயல்களும் ஆகும்.

நிறவெறி ஆளுமையையோ, இனவெறி ஆட்சியையோ ஒருவர் கண்டிக்க விரும்புகிறார் என்றால், முதலில் அவர் அத்தகைய நிற இனப் பாகுபாடுகளை மனத்தாலும் நினையாத, பாராட்டாத ஒருவராக இருத்தல் வேண்டும். ஆனால், இராசீவ் காந்தியை இந்தியாவில் உள்ள பல்வேறு தேசிய இனங்களில் அத்தகைய வேறுபாடுகளைப் பாராட்டாத மனவுணர்வு கொண்டவராகக் கருதவே முடியாது. முதலில் அவர் ஒரு பச்சைப் பார்ப்பன உணர்வினராகவும், இந்து மத வெறியராகவும் உள்ள தன்மையை எவரும் மறுத்து விட முடியாது. இதற்கு அவர் போட்டிருக்கிற பூணூலும், அவர் செய்கின்ற மதச் சடங்குகளுமே சான்று. இத்தகைய மனவுணர்வு கொண்ட அவர் ஆப்பிரிக்கக் கறுப்பு நிற மக்களுக்கு இரங்குவதாக, உலகம் மெச்சத் தகுந்த பற்பல நடவடிக்கைகளில் இறங்கிச் செயலாற்றுகிறார் என்றால், அவை அவரின் உலக விளம்பரத்துக்காகவும், அரசியல் நிலையில் தம்மை வலுப்படுத்திக் கொள்வதற்காகவுமே இல்லாமல் வேறு எதற்காக இருக்க முடியும்?

ஆப்பிரிக்கக் கறுப்பர் இனத்திற்காக இரங்குகிற, வருந்துகிற ஒருவர் தலைமையமைச்சராக உள்ள ஒரு நாட்டில், தீண்டாமையும், காணாமையும், சாதியிழிவுகளும் இருக்க முடியுமா? எழுபத்தைந்து கோடி மக்கள் வாழுகின்ற இந் நாட்டில் ஏறத்தாழ இருபது கோடி மக்கள் இழிசாதி மக்களாக, தாழ்ந்தவராக, கீழானவர்களாக, கோயில் குளங்களில் நுழைவதற்கு இயலாமல் இன்றைக்கும் புழுப் பூச்சிகளாகச் சாய்கடைகளிலும், குப்பை மேடுகளிலும், சேரிகளிலும், கழிவு நீர்த் தேக்கங்களின் ஓரங்களிலும், மலைகளில் உள்ள புதர்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றால், இவற்றைப் பற்றியெல்லாம் இரங்காத, கவலைப்படாத, அவர்களின் மீட்சிக்கு ஓர் இம்மியளவும் துணை செய்யாத, அவர்களைத் தாழ்த்திக் கொண்டுள்ள மேல் சாதி இனத்திலுள்ளவராகப் பெருமையுடன் கூறிக்

(தொடர்ச்சி 6.ஆம் பக்கம் பார்க்க)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும்
உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம்; உ.த.மு.க.

தொடர் 2

உரிமை மீட்புப் போராட்டங்களில் புதுமை செய்த புரட்சிப் பெண்கள்!

-வியனரசு.

7. ஈரான் நாட்டுப் பெண் புலி மரியம் பெரோசு. (ஈரான்)

தனக்கெனத் தனியான ஒரு வானூர்தி; அதிலே தங்கத்தால் செய்யப்பட்ட குளியல் அறை; தான் உள்நாட்டில் பயணம் செய்யத் தங்கத்தால் செய்யப்பட்ட மகிழுந்து; இப்படி ஆடம்பரமான முறையில் தான் மட்டுந்தான் வாழ முடியும் என இறுமந்து திரிந்தான் ஈரான் நாட்டு மன்னன் சா (ஷா) இவன் ஆட்சியில் உழைக்கும் மக்கள், உண்ண உணவும், இருக்க இல்லமும், உடுக்க உடையும் சரியான முறையில் தங்களுக்கு வேண்டும் என வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை உரிமைகளைக் கேட்டுப் போராடினர். மக்கள் உணர்வுகளை மதிக்க மனம் இல்லாத மன்னன் சா, அவர்களைச் சுட்டுக் கொல்லக் கட்டளை இட்டான். ஆயிரக்கணக்கான மக்கள் ஒரே நாளில் சுட்டுக் கொல்லப்பட்டனர். இத்தகைய கொடுமையாளனை எதிர்த்துப் போராடிய ஈரான் நாட்டுப் பெண் புலிதான் வீராங்கனை மரியம் பெரோசு என்பவர். மன்னன் சா ஆட்சியை எதிர்த்து 30 ஆண்டுகளாகப் போராடிய அன்னை மரியம் பெரோசு ஏறத்தாழ 15 ஆண்டுக் காலம் தனனுடைய வாழ்க்கையைச் சிறைக் கூண்டுக்குள்ளே கழித்தார் என்றால், எண்ணிப் பாருங்கள், அந்த அன்னையாரின் ஈகத் தன்மையையும், மக்கள் மேல வைத்த அன்பையும், கொடுமையை எதிர்த்துப் போராடும் உள்ளத் துணிவையும்.

அன்னை மரியம் பெரோசு போராடிக் கொண்டிருக்கும் வேளையில் மதத்தின் பேராலும், முற்றுரிமையை எதிர்த்தும், மக்களாட்சியை வலியுறுத்தியும் ஈரான் நாட்டு மக்களைத் திரட்டிப் போராடி வந்த தலைவர்தாம் இன்றைய கொடுங்கோல் ஆட்சியாளராக மாறியுள்ள கொடியவன் கோமேனி. அன்று மக்கள் தலைவராக இருந்ததாலும் மக்களாட்சியை மலரச்செய்யப் பாடுபட்டதாலும் அன்னை மரியம் பெரோசு கோமேனிக்கு ஆதரவாக மக்களைத் திரட்டி, 'சாவு'க்கு எதிராகப் போராடினர். இவர்கள் போராட்டம் வெற்றி பெற்று ஆட்சியாளராகக் கோமேனியை மக்கள் அமர்த்தினர்கள். ஆனால் கோமேனியும் மத வெறியாலும், அதிகார ஆசையாலும் ஈராக் மீது படையெடுத்து 5 ஆண்டுகளாக விடாமல் போர் தொடுத்துக் கொண்டிருக்கிறார். போருக்குப் பிள்ளைகளை அனுப்பாத பெற்றோர்களையும், போரை நிறுத்த வேண்டுமெனக் கூறும் அரசியல் தலைவர்களையும், அதிகாரிகளையும் சிறையிலடைத்து உறுப்புச் சிதைவுகள் செய்து, கொடுமை புரிந்து வருகிறார். இந்தக் கொடுமையையும் பொறுக்காத அன்னை மரியம் பெரோசு மீண்டும் தமது பக்களைத் திரட்டிக் கோமேனிக்கு எதிராகப் போராடினர். ஆனால் கோமேனியரசு அவரைத் தளைப்படுத்திச் சிறைலடைத்து, உறுப்புச் சிதைவு செய்து கொஞ்சம் கொஞ்சமாகக் கொன்றே விட்டது. அண்மையில் மறைவு அடைந்த அந்த அன்னைக்கு, 65 அகவை என்றால் எண்ணிப் பாருங்கள்! அன்னை மரியம் பெரோசு தொடங்கிய போர் இன்னும் நின்றுவிடவில்லை. அது அவரின் மறைவுக்குப் பின் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. கோமேனியரசு ஒரு பக்கம் ஈராக் படையையும் மறுபக்கம் உள்நாட்டு மக்கள் படையையும் ஒரு சேரச் சந்திக்க வேண்டிய இருதலைக் கொள்ளியாகத் தடுமாறிக் கொண்டுள்ளது. எந்த நேரத்திலும் கோமேனியரசு வீழும்; அன்னை மரியம் பெரோசு போர் வெல்லும் என்று ஈரான் மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

8. வங்கம் பெற்ற பெண் அரிமா காசினு வசித், (பங்களா தேசம்)

ஆயிரக் கணக்கான மக்கள் கொட்டிய அரத்தத்தில் மலர்ந்த நாடுதான் பங்களா தேசு எனும் கிழக்கு வங்கம். இந்த வங்கம் வென்ற அரிமா முசுபூர் ரகுமான் பெற்ற தங்கம்தான் காசினு வசித். இவருக்கு அகவை 35 தான் ஆகிறது. வங்கத்திற்கு 1972-ஆம் ஆண்டு பாக்கிசுத்தானிடமிருந்து விடுதலை வாங்கித் தந்தவர் முசுபூர் ரகுமான். இவரையும், இவர்தம் குடும்பத்தினரையும் சுட்டுக் கொன்றவர்கள் இன்று வங்க நாட்டின் ஆட்சியாளர்களாக உலா வருகிறார்கள். அது மட்டுமன்று மக்கள் நாயகத்திற்கு வித்திட்ட சியாவுல் ரகுமானையும் சுட்டுக் கொன்று, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசுத் தலைவர் அப்துல் சத்தாரையும் தூக்கி எறிந்து, ஆட்சியைச் சூழ்ச்சியால் கைப்பற்றி, இன்று முடியாட்சி நடத்திக் கொண்டு இருப்பவர்தாம் இன்றைய (மன்னன்) குடியரசுத் தலைவர் எர்சாத். இவரை எதிர்த்துப் போராடி வருபவர்தாம் காசினு வசித். இவருக்கு மக்கள் பெரும் ஆதரவு நல்கி, இவர் நடத்தும் போராட்டத்தில் பெருமளவில் மக்கள் பங்கெடுத்துக் கொண்டு போராடி வருகிறார்கள்.

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க)

முன்னிதழ்த் தொடர்ச்சி

கருத்தரங்கை வரவேற்று வாழ்த்துரைத்த நெஞ்சங்கள்!

14. செயல்முறைப் போராட்டத்தின் முதல் நாள்!

அன்பின் ஐயா, வணக்கம். நான் வான்படை நிலையத்தில் பயிற்சி எடுத்துக் கொண்டுள்ளேன். தங்களை எனக்குக் கடந்த சில ஆண்டுகளாகத் தெரியும். 'தமிழ் நிலம்', 'தென்மொழி' இதழ்களைப் படிப்பவன். கடந்த மாதத் தென்மொழியில் தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு'ச் செய்தியினைக் கண்டவுடன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

நாம் நேரிடையான போராட்டத்திலிறங்கு முன் நமக்கு மக்கள் ஆதரவும் பொருளும் மிகவும் தேவையாகும் 'இனியும் நம் காலம் தாழ்த்தக் கூடாது நாள்கள் கடத்தினால் இவ்வரசியல்காரர்களும்' அதிகார ஆளுமைகளும் தமிழர்களைச் சுரணையற்றவர்களாக மாற்றிடுவர் முதலில் நாம் பெற வேண்டியது பொதுமக்கள் ஆதரவு அதற்காகத் திரைப்படத்தாலும், கீழ்த்தரமான எண்ணங்களாலும் சீரழிந்து கொண்டிருக்கும் மாணவர்களைத் திருத்த வேண்டும். சிற்றூர்கள் தோறும் சென்று தனித் தமிழ் நாட்டிற்கான இன்றியமையாமையை எடுத்துக் கூற வேண்டும். அவர்களை அந்தத் தேசியமாயையிலிருந்தும் திரைப்பட மயக்கங்களில்(போதையில்) இருந்தும் விடுவிக்க வேண்டும். எளிய ஏழைகளும் மக்களின் ஆதரவினைப் பெற வேண்டும். இவற்றிற்கெல்லாம் தேவை படித்த இளைஞர்கள் சிதறிக் கொண்டிருக்கும் அவர்களின் சிந்தனையைத் தெளிவுபடுத்த வேண்டும். திசம்பர் 28-ஆம் நாள் நமது செயல்முறைப் போராட்டத்தின் முதல் நாள் அன்று முதல் நாம் மிகவும் முனைப்பாக நமது கொள்கை நோக்கத்தின் இலக்கை நோக்கி விறு நடை போடவேண்டும்.

ஐயா, என் சூழ்நிலையால் நான் வான்படையில் சேரவேண்டியதாயிற்று. இங்கிருந்தே நான் கடமையாற்ற முடியுமென நினைத்தேன்- அது எள்ளவும் முடியாது இங்கு முழுவதும் இந்திதான். தமிழகத்திலும் ஏதோ வட இந்தியாவில் உள்ளதைப் போல உள்ளது. படை வாழ்வு ஓர் அடிமை வாழ்வே

இன்னும் சில நாள்களில் நானும் களம் புக வான்படையை விட்டு வெளியே வர விருக்கிறேன் தங்களை நேரில் காண ஆவலாய் உள்ளேன். முடியுமாயின் நானும் கருத்தரங்கில் கலந்து கொள்கிறேன். என் முகவரியை அடுத்த பக்கத்தில் எழுதுகிறேன். இயலுமாயின் ஒரு மடல் எழுதலாம். தங்கள் மாணவன்

இரா. அருள்பாரி. சென்னை-46

15. இந்தக் கருத்தரங்கு காலத்தின் தேவை.

அன்புடையீர்! வணக்கம், தாங்கள் அனுப்பி வைத்த 'தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு' அழைப்பிதழ் கிடைத்தது. தங்கள் முயற்சி எனக்கு மிகுந்த மகிழ்வைத் தந்தது. இந்தக் கருத்தரங்கு காலத்தின் தேவை. கருத்தரங்கில் கலந்து கொள்ள மிகுந்த விருப்பமே. ஆனால், ஏற்கனவே உறுதி செய்யப்பட்ட நிகழ்ச்சிகளின காரணமாக 26-ஆம் நாள் முதல் 30-ஆம் நாள் வரை மதுரையில் இருக்க வேண்டியிருப்பதால், கருத்தரங்கில் கலந்து கொள்ளும் வாய்ப்பை இழக்க வேண்டியுள்ளது. உங்கள முயற்சி சிறக்குமெனபது திண்ணம்.

அன்புள்ள, வைரமுத்து, சென்னை-24
(திரைப்படப் பாவலர்)

16. தமிழினம் தலைநிமிர்ந்து வாழ, கழக முடிவுக்குக் கட்டுப்படுவேன்!

அமுதூறும் தமிழ்மொழியறிஞர் பாவலரேறு ஐயா அவர்கட்கு, சோலைத் தமிழன்பன் வணக்கத்துடன் வரையும் மடல். நலம், நலமே விளைக. தாங்கள் விடுத்து வைத்த தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்க அழைப்பிதழ் கிட்டியது. கடந்த திங்கள தென்மொழி வாயிலாகவும் தெரிந்து கொண்டேன். மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். தாழ்ந்து கிடக்கும் தமிழினம் வருங்காலத்திலாவது தலை நிமிர்ந்து வாழ, கழகம் எடுக்கின்ற முடிவுக்குக் கட்டுப்படுவேன்.

விழா சிறப்புற எனது உளமார்ந்த நல்வாழ்த்து!
அன்புடன், சோலை. தமிழன்பன். திண்டுக்கல்-3

17. மாநாடு மிகவும் சிறப்பாக நடக்க எனது உளமார்ந்த வாழ்த்துகள்!

பெருமதிப்பிற்குரியீர், தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றேன். மிக்க மகிழ்ச்சி. அந்த மாநாடு மிகவும் சிறப்பாக நடக்க எனது உளமார்ந்த வாழ்த்துகள். மாநாட்டில் கலந்து கொண்டு பேசும் அளவு எனது உடல்நிலை சரியில்லை. கடந்த ஒரு கிழமையாக சளி இருமல் அதிகமாகத் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றன. வருகிற சனவரி மாதம் இறுதியில் அங்கு வருகிறேன். அப்போது நேரில சந்திக்கிறேன்.

இங்ஙனம், கு. கலியபெருமாள், பெண்ணாடம்.

18. கருத்தரங்கம் தமிழினத்திற்கு வாழ்வளிக்க வாழ்த்துகின்றேன்!

பேரன்புடையீர், வணக்கம். தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு தொடர்பாகத் தங்களிடமிருந்து எங்கள் தந்தை அவர்கட்கு இரண்டு அஞ்சல்கள் வந்திருந்தன. இரண்டு துண்டறிக்கைகளும் கிடைக்கப் பெற்றோம்.

எங்கள் தந்தையார் தற்போது பெங்களூரில் இருக்கிறார்கள். அவர்களுக்கு நாங்கள் தெரிவிப்போம். வசதியிருந்தால் எப்படியும் கலந்து கொள்வார்கள். தங்கள் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கம் தமிழினத்திற்கு வாழ்வளிக்க வாழ்த்துகின்றேன். நன்றி! தங்கள் தமிழன்பில, மு. எலன் கெல்லர் சாந்தி.

தூத்துக்குடி-3

19. தனிநாடு கேட்பது தவறானது!

அன்புடையீர். வணக்கம். நேரில் வருவதற்கு இயலவில்லை. கீழ்க்காணும் கருத்துகளைக் கருத்தரங்கின் முன் ஆய்வுக்கும் தீர்வுக்கும் முன் வைக்கிறேன்:

1. தனிநாடு கேட்பது என்பது இந்தியச் சட்டப்படி தவறானது; தமிழகத்தில் தனிநாடு பெற வேண்டும் என்ற பெரும் புரட்சிக்கான வித்துகளும் இல்லை "மாநிலத் தன்னாட்சி" என்ற கொள்கையே காற்றோடு விடப்பட்டுள்ளது. தற்போதுள்ள சூழலில் 'மாநிலத் தன்னாட்சி' கேட்பதும், கேட்குமாறு கட்சிகளுக்கு உணர்வு தருவதும், மக்களுக்கு அறிவூட்டுவதும் தேவையான ஒன்றாகும்;

2. இந்தி எதிர்ப்பு 1935 முதல் இன்றுவரை நடந்து வருகிறது. 'ஆங்கிலம் ஆட்சிமொழியாக வேண்டும்' என்பதாக மாற்றக் கேட்கும் நிலை சிலரிடம் தோன்றியுள்ளது. அந்த மாநிலத்தின் மொழி ஆங்காங்கு ஆட்சி மொழியாகவும் ஆங்கிலமும் இந்தியும் இணைப்பு மொழிகளாகவும் நடுவண் அரசினாலும் பின்பற்றப்பட வேண்டும் என்பதைக் கேட்பதே இப்போது ஏற்புடையது.

3. தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சி மொழி முழு அளவில் செயற்பட வேண்டும். முதல் நிலையாக ஆங்கிலப் பயிற்று மொழி என்பது முழு அளவில் செயற்பட வேண்டும். முதல் நிலையாக ஆங்கிலப் பயிற்று வழி மழலையர் பள்ளிகள் தடை செய்யப் படவேண்டும்.

4. தமிழ்ப் பண்பாட்டை அழிக்கும் திரைப் படங்களும் இதழ்களும் எதிர்க்கப்பட வேண்டும்.

5. தமிழின நலம் நாடும் கட்சிகள், தமிழ் அமைப்புகள் இடையே உள்ள பிளவுகளை நீக்கி ஒன்றுபடுத்தக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

தமிழ் அன்பிலே, -பா. இறையரசன், பூண்டி-3

20. தமிழரின் வலிவொடுக்கி நோய்!

பெருந்தகையீர், வாழ்க. வணக்கம். தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு மாநாட்டிற்கான அழைப்புத் தாளினைப் பெற்றேன். பெரு மகிழ்ச்சி. ஆயினும் அடியேன் அச் சிறப்பு மிக்க மாநாட்டில் கலந்து கொள்ள இயலா நிலையினை அடைந்து விட்டேன். அதற்கென யான் தனி வகையில் வருந்துவதுடன் வர இயலாமைக்கு மன்னித்தருளுமாறும் கோருகிறேன்.

"தமிழ்நாடு. தமிழ்மொழி, தமிழ்க்குடிமக்கள், அவர்தம் வாழ்வியல், பண்பாடு ஆகியவை குறித்துத் தமிழ்க் கடல் மறைமலையடிகள், செந்தமிழ் ஞாயிறு பாவாணர், ஆகியோர் எவற்றை முடிவாகக் கொண்டு ஒழுகினார்களோ எழுதினார்களோ- அவற்றை அடியொற்றியும் - தாங்கள் மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றும் தமிழ் அறிஞர்கள் முடிவையும், ஆய்ந்து, பின் உரிய முடிவைத் தமிழ்க் குடிமக்கள் யார்க்கும் சென்று எட்டுமாறு செய்தல் வேண்டும்"- என்பது அடியேனின் பணிவான வேண்டுகோள். மேற்கண்ட தீர்மான முடிவுகள் களப்பணியென விரைந்து நிகழ்தல் முகாமையானதாகும்.

இன்று மக்களகத்தில் பொறாமை, காழ்ப்பு, பகைமை, தற்செருக்கு, தன்முனைப்பு ஆகியவை வளர்ந்து பெருகியும், அதன் வழிச் சாதிப் போர்களும். இன்ன பிற சொல்ல வியலாத நிலைகளும் உள்ளன. இவை எல்லாம் தமிழர் ஒற்றுமைக்கும் தமிழ் நாட்டிற்கும் தடையாகவுள்ள வலிவொடுக்கி (எய்ட்சு)நோய். இந்நோய் தீர்க்கப்படல் வேண்டும்.

அதற்குரிய காலம் அண்மையில் உளது எனலாம். தங்கள் போல்வார்- பலர்- ஒருங்கு கூடி அரிதின் முயன்று, விரைந்து செயல்பட்டால், தமிழ் இனத்திற்கும், தமிழ் மொழிக்கும், தமிழ் நாட்டிற்கும் பழம்பெரும் நற்காலம் மீண்டும் தோன்றலாம் என எதிர்பார்க்கலாம்.

உளம் ஒன்றிய உண்மை அன்புத் தமிழ் வாழ்வு அரும்பிட மூல முழு முதற் கடவுளைத் தனி வகையில் வேண்டி, மன்றாடி என் கருத்தை முடிக்கிறேன்.

அ. முல்லைவாரணன், பெங்களூர்-30

(தொடரும்)

இன விடுதலையே எதனினும் முதலது!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்,
உணர்வும், உயிர்ச்செறிவும் !
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும் ! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும் ;
எனவே சலிப்பிலனாய்,
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே !

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-4) இதழ் எண்-79 (31-1-1987) (பகுதி39-40)

இந்தித் திணிப்பும், எதிர்ப்பு நாடகங்களும் !

மிகுந்த மன வருத்தத்தோடு இதை எழுதவேண்டி இருக்கிறது. மாந்த வரலாற்றில் குமுக மாற்றத்திற்கும் சரி, அரசியல் மாற்றத்திற்கும் சரி, வேறு கலை, பண்பாட்டு மாற்றத்திற்கு ஆனாலும் சரி. காலம் - என்பது மிக மிக இன்றியமையாதது.

தகுந்த காலத்தில் புரட்சியைச் செய்ய வேண்டுவதும், அதைக் குறிப்பிட்ட காலத்திற்குள் வலுவாக வளர்த்தெடுப்பதும் முகாமையானவை ஆகும். அங்ஙனம் செய்யத் தவறுவீது அச் சூழல் கனிவதற்கு ஏற்பட்ட கால எல்லை, எதிர்காலத்தில் சில மடங்கு எல்லையை நோக்கிப் போய்விடும் என்பது உறுதி.

இந்த வகையில் இந்தித் திணிப்பு எதிர்ப்பு என்பது தமிழகத்தைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் நயன்மைக் கட்சி ஆட்சியில் இருந்த காலத்திலிருந்தே, ஏறத்தாழ ஐம்பது - அறுபது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நடந்து கொண்டுவரும் ஒரு 'கட்சி வணிக நாடக'மாக நடந்து வருகிறது என்பதை அமைந்து எண்ணுகிற நிலையில் ஏற்றுக் கொள்ளவே வேண்டி வருகிறது.

மொழி வழியாலான மாநிலப் பகுப்புகள் பிரிக்கப்பட்ட பின்னும் - பேராயக் கட்சியினர்தாம் இந்தி நுழைய வழி அமைத்துத் தருகின்றனர் என்ற ஐயப்பாட்டை உடைத்துத் தெளிவாக்குகிறபடி 'திராவிடம்'- பேசிக் கொண்டிருந்த ஒட்டுண்ணிக் கட்சிகளான (Lumpen Politicians) தி. மு. க. வும், அ. தி. மு. க. வும் ஆட்சிக்கு வந்த பொழுதும் கடந்த காலங்களைவிடப் பன்மடங்கு அதிகமாகவே இந்தித் திணிப்பு இருக்கிறது என்பதை எவரும் மறுத்துவிட முடியாது

'அறிவியல் உருவாக்கங்கள் தலையெடுக்க எடுக்க அவை யாவும் ஆளும் பிரிவினரின் நலன்களுக்காக மட்டுமல்லாமல், உழைக்கும் - அடிமைகளை மேலும் அடக்குவதற்கே - ஒடுக்குவதற்கே பயன்படும்' -என்று மார்க்சு கூறியதுபோல், இன்றைக்கு உருக் கொள்ளுகிற அனைத்து ஆக்கங்களும் இந்தி மொழி வாயிலாகவே நடக்கிறபடியான சூழலை நடுவண் அரசு வலுக்கட்டாயமாகச் செய்து வருகிறது என்பது தெளிவு.

0 குழந்தைகள், பள்ளி மாணவப் பருவக் கல்வியிலிருந்து,
0 நடுவண் அரசுப் பணித்துறைகளில் அனைத்திலுமாக,
0 மக்கள் தொடர்புள்ள அனைத்துக் கருவிகளிலுமாகவும் (இந்தி, சமற்கிருதப் பாடங்களும், பிற நிகழ்ச்சிகளுமாக வானொலியிலும், இந்திக்கே குத்தகையெடுக்கப்பெற்ற தொலைக்காட்சியிலும்)

-திணிக்கப்படுகிற நிலையில் இந்த இந்தி மொழி வெறியர்களின் கொட்டத்தை என்ன என்று எடுத்துரைப்பது!

தமிழகத்தில் இக்கால் இந்தித் திணிப்புக் கலகங்கள் நடந்து கொண்டே இருக்கிற இந்தச் சூழலில் கூட அனைத்து நடுவண் அலுவலகங்களுக்கு இந்தி பயிலுவது தொடர்பாக ஒரு சுற்றறிக்கை வந்துள்ளது. அதில் **இந்தியைப் படிக்க விரும்புகிறீர்களா, இல்லையா- என்று கேட்காமல்- இந்தியை எந்த வழியில் படிக்க விரும்புகிறீர்கள்- அஞ்சல் வழியாகவா, வகுப்புகள் வழியாகவா அல்லது பிற வழிகளிலா** என்றே கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன. இதன் வழி படிக்கவேண்டுவது **கட்டாயமாக்கப் பட்டுள்ளது**- என்பதை யாரும் மறுக்க இயலாது.

மேலும் அண்மையில் இந்தியா வந்திருந்த சோவியத்துத் தலைவர் கோர்பச் சேவ் வருகையையொட்டி, தில்லி மாநகர் முழுவதும் இந்தியிலும், உருசிய மொழியிலுமே சுவரொட்டிகளும், பதாகைகளும் (Banners) கட்டிவிடப் பெற்றிருந்தன. இ'து எந்த வகையில் பிற தேசிய இனங்களையும், தேசிய மொழிகளையும் கீழ்மைப் படுத்துவது என்பதை இன்னும் நம்மவர்கள் விளங்கிக் கொள்ளவில்லை.

கட்டாயத்தின் பேரிலோ, பிற அழுத்தங்களினாலோ நாம் கூட்டுக் குடும்ப நெறியில் குடும்பத்தில் இருக்கும் பொழுது, வீட்டிற்கு வருகிற பெரிய மாந்தர் ஒருவரை அழைக்கக் குடும்ப உறுப்பினர் ஒருவர் மட்டும் மிகவும் ஈடுபாடு காட்டி, மற்றவர்களின் ஈடுபாடுகளையோ அல்லது அவர்கள் இருப்பையோ மறைத்துவிடுவது, அக் குடும்பத்தினர்க்கு எப்படி மேலும் விரிசலை உண்டு பண்ணுமோ -அப்படி யல்லவா பிறதேசிய இனங்களுக்கு உணர்வுகள் ஏற்பட்டிருக்க வேண்டும்.

-ஆனால் நம்மைப் பொறுத்த வரையில், அ'தாவது இந்தித் தேசியத்தைத் தவிரப் பிறதேசிய இனங்களுக்கு அப்படிப்பட்ட உணர்வு வளராமல், ஏராமல் இருப்பதற்குக் காரணங்கள் சில இருக்கின்றன.

1. இந்திய ஆளும் கொடுநெறி அரசே இந்தியத் தேசியஒற்றுமை எனனும் போலிவலையை விரித்து, அதற்கு மாறுகச் சிந்திப்பவர்களைக் கூட எதிரிகளாகக் கொள்வதும்,
2. அதற்குத் துணை பாடிக் கொண்டு, இங்குள்ள தேசியக் கட்சிகள் (மாநிலக் கட்சிகள்) தத்தம் நலன்கள் காக்கப் பெற வேண்டும் என்பதற்காகவும், தங்களின் கோழைத்தனங்களையே அறிவு என்று விளம்பரப்படுத்திக் கொள்ள வேண்டி இந்திய ஒற்றுமைக்காக இவையும் வலை விரிப்பதும்,
3. என்றென்றைக்கும் இங்குள்ள தேசிய இனங்கள் விழித்துக் கொள்ளக் கூடாது, வகுப்புப் பிரிவுகள் (வர்க்கப் பிரிவுகள்) கூர்மைப் படுத்தப்படக் கூடாது என மக்களைச் சாதி மத வழியாகக் கூறுபோட்டு நிலைப்படுத்தப் பார்ப்பனியம் செயல் படுவதும்,
4. அப்படியே சாதி, மத விடிவிற்கு உட்பட்டு வந்தாலும் பொது மாந்த உணர்ச்சியடிப்படையில் வீழ்ந்து போகிற வகையில் படிப்படியாகக் கலை, நாகரிகப் பண்பாடுகளைச் சீரழிப்பதான திரைப்பட, நாடக அழிவாக்கங்களைத் திணிப்பதும்,

ஆகிய அளவில் தொடர்பணிகள் நடந்து கொண்டே இருக்க, இவ்வாளுமை நிலைகளில் எதில் வீழ்ந்து படாமல் இம் மக்களினம் எழுச்சி கொள்ள இயலும்?

தங்களுக்குக் கிடைத்த ஒன்பது ஆண்டுக் கால ஆட்சி வரலாறறில் தமிழக அளவில் அனைத்துத் துறைக் கல்வியும் தமிழில்தான், தமிழ்வழி கற்றோர்க்கே தமிழகத்தில் அரசுப் பணி - என்று **உறுதியிட்டுக் கூறத் துணிவற்றிருந்த** தி. மு. கழகமும், இன்றைக்கு அந் நிலையில் இருக்கிற அ. தி. மு. கழகமும் என்னதான் தொண்டை வரள இந்தி எதிர்ப்புப் பேசி என்ன பயன்?

செய்ய வேண்டிய ஆக்கங்களைச் செய்கிற இடத்தில் உள்ளவர்களே செய்ய மறுத்ததும், மறுப்பதுமான சூழலில் இருந்துவிட்டு, இருந்து கொண்டு, எந்த நலன் கருதி இக்கால இந்தியை எதிர்த்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பது நமக்கு உண்மையில் விளங்கவில்லை.

இருப்பினும் ***'பொது எதிரியை வீழ்த்துகிற அல்லது எதிர்க்கிற நோக்கில் தேசிய எதிரிகளோடும், முதலாளிகளோடும் பகைமை கொள்வதை முகாமையாக எண்ணக் கூடாது'***- என்ற மாவோ-வின் நெறிப்படி- இன்றைக்குத் தி. மு கழகம் தான் எடுத்திருந்த போராட்டத்தை இரு கைகூப்பியே வரவேற்றது தமிழ் நிலம்!

ஆயினும்,

'ஒவ்வொரு கருத்திற்குப் பின்னாலும் ஒரு வகுப்பின் (வர்க்கத்தின்) முத்திரை குத்தப்பட்டுள்ளது' என்று இலெனின் குறிப்பிட்டிருப்பது போல், இந்தி எதிர்ப்பு நிலையிலும் தி மு. க. எடுத்த போராட்டம் முதலாளிய வகுப்பிற்கே அல்லது முதலாளிய எண்ணத்திற்கே உகந்ததாக இருக்கிறது என்பதை எவரும் மறுத்துவிட இயலாது.

சட்ட எரிப்பின் அடிப்படையில் திரு, அன்பழகன் உள்படப் பத்து சட்டமன்ற உறுப்பினர்கள் நீக்கப் பட்டதுவரை, சட்ட எரிப்புப் பற்றிப் பேசி வந்த திரு. கருணாநிதி அவர்கள், உடனே **தாம் எரித்தது சட்டம் அன்று வெறும் தாள்தான் என்று** வெளிப்படையாக அறிவித்ததும், வழக்கு மன்றத்தில் 'இந்தி ஒழிக' என்று நான் கூறவில்லை 'தமிழ் வாழ்க' என்றே குறிப்பிட்டேன் என்று இந்தித் திணிப்பு எதிர்ப்பை உடைப்பிலே போட்டுவிட்டு, அவரைப் பாதுகாத்துக் கொள்ள அவர் அலறுவது, அவர்கள் மீது நமக்கு நம்பிக்கையின்மையையும், வெறுப்பையும் ஏற்படுத்துவதுடன், அவருடன் சிறை சென்ற இருபதினாயிரம் கழகத் தோழர்களின் மீதும் இத் தமிழக மக்களின் மீதும் ஓர் இரக்கத்தையும், வருத்தத்தையுமே உண்டு பண்ணுகின்றன.

இந்தி மொழித் திணிப்பு தமிழகத்தில் உள்ள அனைத்து மக்களையும் தொல்லைப்படுத்துகிறது என்பது பச்சை உண்மைதான். அவ்வுண்மைக்கான விடிவு இன்றைக்கு மிகக் குறைந்த, இன்னுஞ் சொன்னால் நடுவண் அரசுத் துறைப் பணியாளர்களுக்கு மட்டுமே தேவை; அதிலும் அவர்களுக்கு மட்டுமே முழுமையாக விளங்கக் கூடியது. மற்ற பொது மக்களுக்கு இழப்பை ஏற்படுத்துவது அன்று; எனவே அவர்களுக்கு முழுமையாக அதன் தாக்கத்தை விளக்குவது என்பது கடினமானது.

-எனவே பெரும்பான்மையான மக்களை அடிமைப் படுத்துகிற அடிமைப்படுத்தியிருக்கிற தன்மையையே அவர்களிடத்தில் சுட்டிக் காட்டி அவர்களை இந்த இந்திய ஆளும் கொடுநெறி அரசுக்கு எதிராக அணி திரட்டுவது என்பது தேவையாகின்றது.

தமிழகத்தின் நிலங்களில் உழவு செய்யும் 60- விழுக்காட்டு மக்களுக்கும், தனி முதலாளியத் தொழிலகங்களிலும், அரசுத் தொழிலகங்களிலும் பணி செய்யும் 5 விழுக்காட்டு மக்களுக்குப் புரியாத, இன்றைய தேவையற்ற, எச்சமுள்ள 10 முதல் 15- விழுக்காட்டு மக்களுக்கே புரிகிற, ஒரு சிக்கலை வைத்துக் கொண்டு புரட்சியே செய்துவிடலாம் என்று எண்ணுவது கற்பனையாகவே முடியும்.

மேலும், இந்தித் திணிப்பு எதிர்ப்புக்கு தி. மு. க. எல்லையாக நேருவின் வாக்குறுதியைச் சட்டமாக்குவது என்ற குறைந்த தொலைவுப் பாதைக்கு மட்டும் எல்லைக்கல் வைப்பது என்பது, எப்படி நெடுந் தொலைவு செல்ல வேண்டுவோர்க்குத் துணை செய்யும்? நம் குறிக்கோள் ஒன்றுனதாக ஓர் எல்லையை வரையறுத்துவிட்டு நாம் சிறிது சிறிதாகவேனும் நகர்ந்து போகலாம்; நம் குறிக்கோளையே குறிப்பிட்ட எல்லைக்கு உட்படுத்தினால் நாம் நடப்பதும் அதைவிடக் குறைந்த தொலைவுதானே இருக்க முடியும்!

-எனவே இவ்வகைப் பின்னணிகளையெல்லாம் வைத்துப் பார்க்கும் பொழுது நமக்கு ஏற்படுகிற உண்மையான வருத்தம் ஒன்றே! **தமிழக மக்கள் விடுதலைக்கான காலம் மேலும் பின்தள்ளப்பட்டுக் கொண்டே இருக்கிறதே என்பதுதான்.**

ஈழத் தமிழர் கொல்லப்படுகிற சூழலில் எழுந்த ***'விளம்பரப் போராளிகள்'*** சிலரை நாம் உண்மைப் போராளிகள் என்று தூக்கிப்பிடித்தோம்; ஆனால் அவர்களோ தத்தம் தனி நலன்களுக்கும், சண்டை சச்சரவுகளுக்கும் அதைப் பயன்படுத்திக் கொண்டார்கள; எனவே இன்றைக்கு ஈழ விடுதலை எவ்வளவு தொலைவில் உள்ளதோ என்று எண்ணி ஏங்க வேண்டிய நிலை ஏற்படுள்ளது. இதனால் இப் போராளிகள் மீதும, அவர்தம் நடவடிக்கைகள் மீதும் நமக்கும் மக்களுக்கும் ஓரளவு வெறுப்பு ஏற்படுவது தவிர்க்க இயலாததே.

இதே போன்றே... 'இந்தித் திணிப்பு எதிர்ப்பு' எனறு இன்றைக்கு தி. மு. க., அ. தி மு. க., சனதா, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (இடதும், வலதும்), முதலிய கட்சிகளின் செயல்களினாலும், பிற வெளிப்பாடுகளினாலும், போலி நாடகங்களினாலும் இத் தமிழக மக்களின உண்மை விடுதலை வெகு தொலைவுக்குத்தள்ளப்படும் எனபதும், இதன் வழியாகவே இந்தித் திணிபபு எதிர்ப்பு தேவையில்லை - என்ற எண்ணம மக்களிடையே உருவாகிப் பாதாளத்தில் தள்ளப்படுவதற்கான காலம் நெருங்கிக் கொண்டிருக்கும் என்பதும், எல்லை நோக்கில் எண்ணிப் பார்க்க வேண்டிய கருத்துகளாகும்.

இந் நிலையில் 'பாவலரேறு' ஐயா அவர்கள் குறிப்பிட்டது போல்,

'உன்னுடன் பிறந்தவன்
உனை யெதிர்க் கின்றான்;
உன்பகைக் கே, செருப்
பாய்உழைக் கின்றான்;
உங்களை இரண்டாக்கி
ஆரியன் வென்றான்;
தமிழா, அட, தமிழா - நீ
உடன்விழி! களிறென
நடையிடு; முனைவொடு!
உயிர்ப்பிலா விடில்
அவன் கொன்றான்!

-என்பதை மனத்தில் நிறுத்தி,

∴ உலக வல்லரசுகளிடமிருந்தும், இந்திய அரசு - முதலாளிகளிடமிருந்தும், தமிழ்த் தேசிய முதலாளிகளிடமிருந்தும்,

∴ சாதி, மத, மூட நம்பிக்கைகளிடமிருந்தும்,

∴ மொழி, கலை, பண்பாட்டு அடிமைத்தனங்களிலிருந்தும்,

-விடுதலை பெறுவதே அனைத்து வகை அடிமைத்தனங்களுக்கும் ஒருமுகமாகத் தீர்வை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்து, உண்மையாக அடிமைப்பட்டுள்ள இத் தமிழக உழைக்கும் அடித்தட்டு மக்களின் தலைமையில் புரட்சி செய்து தமிழக பொதுவுடைமைக் குடியரசை நிறுவும் நோக்கில செயல்படுவோமாக!

—விடுதலை வேட்பன்

இந்தித் திணிப்பால் இந்தியா பிரியட்டும்!

தமிழகத்தில் தொடர்வண்டித்துறையில் தில்லியரசு கொள்ளையடிக்கும் உருபா ஆண்டுக்கு 800 கோடி!

--கரிகாலன், வீரமங்கலம்

வடநாட்டரசு, தென்னகத் தொடர் வண்டி இருப்புப் பாதைகளின் நீளம் 6766 அயிர மாத்திரி (கி. மீ). தமிழ் மாநிலத்தில் மட்டும் அதன் நீளம் 3977 அயிரமாத்திரி(கி. மீ.)என அமைத்துள்ளது!

இவ்வளவு நீள இருப்புப் பாதைகளும் வெள்ளையன் ஆட்சியில் போடப்பட்டனவாகும். வடநாட்டான் ஆட்சியில் சில நூறு கி. மீ. நீளம் உள்ள பாதைகள் மட்டுமே போடப்பட்டன. மேலும், வெள்ளையன் ஆட்சியில் அமைக்கப்பட்ட 3000 கி.மீ. பாதைகளின் கரைகள் உறுதியற்ற நிலையில் உள்ளன. இன்னும் வடநாட்டு இந்திக்காரன் இந்த ஆளுமைக் கேட்டைக் கவனிக்கவில்லை. தமிழர்கள் இக்குறைகளைக் கேட்டால், பணம் இல்லை என்று தில்லியரசு கூறுகிறது.

அதே நேரத்தில் தில்லியரசு வடநாட்டுப் பகுதியில் பல ஆயிரம் கி. மீ. பாதைகளைச் செப்பனிட்டும் புதியப் பாதைகளை அமைத்தும் வருகின்றது.

தமிழ் நாட்டில் மிகப் பெரிய சந்திப்பு நிலையங்களாக சென்னை நடுவண் (Central), எழும்பூர் உட்பட 31 சந்திப்பு நிலையங்கள் உள்ளன. சிறிய, பெரிய மற்றும் நடுத்தர நிலையங்கள் 620 இருக்கின்றன.

சென்னையில் பெரம்பூர் தொடர்வண்டிப் பெட்டித் தொழிற்சாலை, திருச்சி, அரக்கோணம், ஆகிய ஊர்களில் பொறியியல் பட்டறைகள் நிலையங்கள், தொடர்வண்டிப் போக்குவரத்து அலுவலகங்கள் அனைத்திலும் ஒன்றே முக்கால் இலக்கம் பேர்கள் பணியாற்றுகிறார்கள்.

இத்துறையில் பெரிய பதவிகளில் அதிகாரிகளாக அமைந்து இருப்பவர்கள் நூற்றுக்கு நூறு பேர் வடநாட்டு இந்திக்காரர்களே. கீழ்த் தட்டிலும், நடுத் தட்டிலும் பணி செய்பவர்கள் நூற்றுக்கு எழுபதுப் பேர் தமிழர்கள்.

தமிழ் நாட்டில் மட்டும் தொடர்வண்டித் துறையின் ஆண்டு வருமானம் 800 கோடி உருபாவிற்கு மேலாகும். அஃதாவது தமிழ் நாட்டு அரசின் ஆண்டு வருவாயில் மூன்றில் ஒரு பங்கு ஆகும்.

திங்கள் பயணச் சீட்டுகள் மட்டும் (சீசன் டிக்கெட்டு) ஆண்டுக்கு ஒரு கோடிக்கு மேல் விற்பனையாகிறது. குறிப்பாக சென்னைப் புறநகர்ப் பகுதியில் மட்டும் நாள் தோறும் பத்து இலக்கம் பேர்கள் தொடர்வண்டி வழியே வந்து போகிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் பல துறைகளில் பணியாற்றும் வணிகர்கள், பயணிகள் ஆவர். பொருள்கள் போக்குவரத்து மட்டும் நாளொன்றுக்குப் பல இலக்கம் கல்லெடை(டன்)கள்.

சென்னைப் புறநகர், நடுவண் நிலையம், எழும்பூர், கடற்கரைச் சந்திப்பு, மாம்பலம், தாம்பரம் போன்ற ஒவ்வொரு நிலையத்திலும் நாளொன்றுக்கு 20 ஆயிரம் பயணச் சீட்டுகள் விற்பனையாகின்றன என்று தொடர்வண்டித் துறை அதிகாரிகள் கூறுகின்றனர்.

வெள்ளையன் இந்நாட்டைவிட்டுச் சென்ற பின்னர் 39 ஆண்டுகளில் தமிழ் நிலத்திலிருந்து தில்லியரசு பெற்ற வருவாய் பல ஆயிரம் கோடிகள் உருபா. அஃதாவது தமிழ்நாட்டிலிருந்து 39 ஆண்டுகளில் வடநாட்டு இந்திக்காரன் அரசு தொடர் வண்டித் துறையில் பெற்றுக் கொண்ட வருமானம் 10 ஆயிரம் கோடிக்கு மேல் ஆகும். அஃதாவது ஊழியர்கள் ஊதியம், அனைத்தும் போக, 39 ஆண்டுகளாகத் தில்லியரசு தமிழ்நாட்டிலிருந்து பெற்ற அல்லது கொள்ளையடித்த பணம் வடநாட்டுப் பகுதிகளைத்தான் வளப்படுத்தியது. தமிழ் நாட்டில் தொடர்வண்டித் துறையின் வாயிலாகத் தமிழ் மக்களுக்கு எந்த வளர்ச்சிப் பணியையும் செய்யவில்லை. அதற்கு மாறாக இத்துறையின் வாயிலாகத் தமிழ் மக்கள் மீது இந்தியைத் திணிக்கத்தான் பாடுபட்டது. ஊழியர்களை இந்தி படிக்கக் கட்டாயப் படுத்திக் கொடுமை செய்தது.

தொடர்வண்டித் துறையில் எங்கு நோக்கினாலும் இந்தியே கண்களை உறுத்துகிறது.

தமிழ்நாட்டில் தமிழ் மக்கள் பேசும் உயர்ந்த வளமான தமிழ்மொழியைப் பின்னுக்குத்தள்ளியது. இத்துறையில் தமிழ்மொழி வளர்ச்சிக்கு எந்தவகை வாய்ப்பும் தராமல் முட்டுக் கட்டை போட்டுத் தடுத்தது. பிப்ரவரி திங்கள் பிறந்தால் போதும், அத்துறையைச் சார்ந்த அமைச்சர், பயணிகள் கட்டணத்தையும், பொருள்கள் மீது அதிகக் கட்டணத்தையும் ஏற்றி, மேலும் பலகோடி உருபாக்கள் தில்லி கொள்ளையடிக்க வழி செய்வதே வழக்கமாகி விட்டது.

வடநாட்டரசு தமிழ் நிலத்தில் இருப்புப்பாதைகளில் சில மாத்திரிகள்(கி. மீ.) பாதைகளையே போட்டது. சில மாத்திரி பாதைகளே மின்னுக்கம் செய்யப் பெற்றன. தமிழ் நாடு முழுவதும் வேறெங்கும் இருப்புப் பாதைகள் மின்னுக்கம் செய்யப் பெறவே இல்லை.

சென்னை சோலையார்ப்பேட்டை பாதையில் மட்டும் இரட்டைப் பாதை அமைத்தது. அதுவும் அந்தப் பாதையில் ஒரு நாளைக்கு 28 பயணிகள் வண்டியும், பொருள்கள் ஏற்றிச் செல்லும் சுமை வண்டிகளும் ஓடவேண்டிய கட்டாய நிலைக்கு இரட்டைப் பாதை அமைக்க வேண்டியிருந்தது. சென்னை எழும்பூர், விழுப்புரம் வரைக்கும் இரட்டைப் பாதையும், அகலப் பாதையும் கட்டாயம் தேவை. ஆனால், தமிழ்மக்கள் தேவையை நிறைவு செய்ய தில்லியரசுக்கு மனமில்லை.

கரூர்-திண்டுக்கல் அகல இருப்புப்பாதைத் திட்டம் இந்தியரசு ஏற்றுக் கொண்டு பணிதொடங்கியும் அப்பணிகள் தொடங்கிய நிலையிலேயே உள்ளன. தமிழ்மக்கள் கேட்டால் தில்லியரசு பணம் இல்லை என்று சாக்குச் சொல்கிறது. இத்திட்டம் முழுமை பெற்றால்தான், தமிழகத்தின் தென்பகுதிகள் தொழில் துறையில் சிறப்பான வளர்ச்சி பெறும். இத்திட்டம் நிறைவேற்றப்படாமையால், தென்பகுதிகள் தொழில் துறையில் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன.

சென்னை மாநகர மக்களின் போக்குவரத்தின் நெரிசலைக் குறைக்க, கடற்கரை - லசு(Luz) பகுதி விரைவு மின் தொடர்வண்டிப் போக்குவரத்துக்குத் திட்டம் தீட்டப்பட்டு அதற்கான நிலங்களைத் தமிழ் நாட்டு அரசு இலவயமாகத் தந்தது. அந்நிலத்தின் மதிப்பு மட்டும், 20 கோடி உருபா என்று சொல்லப்படுகிறது. அந்தப் பணியும் தொடங்கிய நிலையிலேயே நிற்கிறது. தமிழ் மக்கள் கேட்டால், தமிழ் நாடு அரசு திட்டச் செலவில் பாதிப் பணம் தந்தால் தான் பாதிப் பணம் போட்டுத் திட்டம் முடிக்கலாம் என்று சொல்கிறது.

அதே நேரத்தில் கல்கத்தா போன்ற நகரங்களில் இதையொத்த பணிகள் விரைவாகச் செயல்பட்டு முடியும் தறுவாயில் உள்ளன. எனினும் தில்லியரசு அந்த மாநில அரசிடம் திட்டச் செலவுகளுக்கான பாதிப் பணம் கேட்காமல் முழுச் செலவையும் தானே ஏற்று நடத்தி வருகிறது. இந்தச் செய்தியிலிருந்து தில்லியரசு தமிழ் மக்கள்பால் கொண்டுள்ள மனப்போக்கினைத் தமிழ் மக்கள் நன்கு புரிந்து கொள்ளவேண்டும்.

சென்னையைச் சுற்றி வட்டப்பாதை அமைத்து விரைவு மின் தொடர்வண்டி விட்டால், அஃதாவது கடற்கரைச் சாலை-லசு-அடையாறு-திருவான்மியூர் - தரமணி - வேளச்சேரி - தாம்பரம் - படப்பை-மணிவாக்கம் - திருபெரும்புதூர்- பூந்தமல்லி - ஆவடி - திருவள்ளூர் இவ்வழியே சென்னை வந்துபோகும் தொழிலாளர்கள், பயணிகள், வணிகர்கள் யாவருக்கும் எவ்வளவோ பயனுள்ளதாகவும், பல இலக்கம் மக்கள் நன்கு பயன்பெறுவதாகவும் இருக்கும்.

மேலும் கடற்கரை-நடுவண் நிலையத்திலிருந்து வில்லிவாக்கம், அம்பத்தூர் தொழிற்பேட்டை, ஐ. சி. எப்., திருமங்கலம், அண்ணாநகர் மேற்கு, இவ்வழியே இருப்புப்பாதை அமைத்து மின் தொடர் வண்டி விட்டால் பணிமனைகளுக்குச் செல்லும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களுக்குப் பேருதவியாக இருக்கும்.

வடஆர்க்காடு மாவட்டத்தையும், தென்னார்க்காடு மாவட்டத்தையும் இணைக்கும் வழியாக வாலாசா, இராணிப்பேட்டை, ஆர்க்காடு, கலவை, வாழப்பந்தல், பெரணமல்லூர், செய்யாறு, வந்தவாசி, திண்டிவனம் ஆகிய ஊர்களின் வழியே இருப்புப்பாதை வட-தென் ஆர்க்காடு மக்களுக்கு மிக மிகத் தேவை.

தொடர்வண்டித் துறையில் பெரும் வளர்ச்சியும் முன்னேற்றமும் எவ்வளவோ தேவை. தமிழ் நாடு இந்தியாவின் ஆளுமையில் இருக்கும் வரை தமிழன் வடநாட்டானுக்கு அடிமையாக இருக்கும் வரை-தமிழ்நாட்டுக்கு-தமிழ் மக்களுக்கு-இத்துறையில் எந்த நற்பயனும் வளர்ச்சியும் ஏற்படப் போவதில்லை.

தமிழ்நாடு விடுதலை பெற்றால், அதற்குப் போதிய வாய்ப்புகள் உள்ளமையால், தமிழகம் எல்லாத் துறையிலும் வளர்ச்சியும் பெறும்; முன்னேற்றமும் அடையும்.

கதிர் வீச்சு வெப்பம் கொண்டு மின்சாரம் உருவாக்கவும் அணுக்கதிர்களாலும், மின்சாரம் உருவாக்கித், தமிழ் நிலத்தில் ஓடும் அனைத்து இருப்புப் பாதைகளும் மின்னுக்கம் செய்யப்பட்டுத் தொடர்வண்டி விடப்படும்.

அதன் விளைவால் ஒரு நாட்டிற்கு இரு கண்களாக விளங்குகின்ற, தொழில், வேளாண்மை ஆகிய துறைகளில் பெரும் வளர்ச்சியும், முன்னேற்றமும் ஏற்படும். இழு பெட்டிகள் தொடர்வண்டிகளை இழுக்கும் இயந்திரங்கள், பேரியியங்கிகள் அதனைச் சார்ந்த ஆலை உதிரி உறுப்புகள் இவற்றின் தொழிற்சாலைகள், பட்டறைகள் ஏற்படுத்திப் பல இலக்கம் தமிழ் மக்களுக்கு வேலை வாய்ப்பும் செய்ய இயலும். உலகச் சந்தையில் போட்டி போட்டு வெற்றியுடன் வணிகம் நடத்தவும் தமிழனால் இயலும்.

இதனை இன்றைய தமிழ் மகன் ஏனோ சிந்திக்க மறுக்கிறான். அவன் கைகள் இரும்புத் தளைகளால் பூட்டப்பட்டு இருக்கின்றன. அவற்றை, உடைக்க மனமின்றி ஏன் கோழை போல் முடங்கிக் கிடக்கிறான்? அவனைச் சுற்றி வறுமை, அடிமை, இருள் சூழ்ந்து இருக்கின்றன. அவ்வடிமை இருளிலிருந்து விலகி ஒளி நிறைந்த பொன்னுலகத்தை நோக்கிச் செல்லவேண்டும் என்று அவன் ஏன் துடிக்கவில்லை? ஆயிரம் ஆண்டுகள், அடிமைகளாக வாழ்ந்தது போதாதா?

(தொடர்ச்சி 5-ஆம் பக்கம் பார்க்க)

பட்டியல்-1

தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு நன்கொடையாளர் பட்டியல்

திருவாளர்கள்...

		ரூ. பை
1.	புகழ்வேந்தன், சென்னை.	100-00
2.	இளஞ்சேரல் முதுபாண்டியன், மேலாழியாறு.	100-00
3.	புலவர். அறிவுடைநம்பி, மூலனூர்.	20-00
4.	பேரா. அரங்கச்செல்வனார், கோபி.	50-00
5.	தென்மொழி நா. இளமாறன், எண்ணூர்.	1000-00
6.	ச. மா. விசுவாசவரம், சென்னை-11.	37-50
7.	அழகுதிலகன், புதுக்கோட்டை.	100-00
8.	இளமுருகன், பு. புளியம்பட்டி.	50-00
9.	தென்மொழி. கதிர்மதியன், பல்லடம்.	500-00
10.	மு. தமிழ்நெஞ்சன், இடங்கண்ணி.	50-00
11.	அன்பு. பம்பாய்.	25-00
12.	க. இராயவேல், சென்னை-21.	5-00
13.	கண்ணன், கரடிப்பட்டி.	20-00
14.	ச. சாகிர், சென்னை-23.	100-00
15.	கொ. செ. சின்னப்பனார், கொம்மக்கோயில்.	10-00
16.	இ. இராசசேகரன், சென்னை.	5-00
17.	ஒருமேலான அன்புள்ளம், சென்னை:	165-00
18.	த. அன்பழகன், மஞ்சள் நீர்க்காயல்	10-00
19.	எசு. பூரணம், சென்னை-58.	201-00
20.	ரேணுகா எண்டர்பிரைசசு, சென்னை-58.	50-00
21.	க. குப்புசாமி, சென்னை-69.	25-00
22.	க. முத்து, தளவாய்ப்பட்டினம்:	30-00
23.	புலவர். ப. எழில்வாணன், பள்ளப்பட்டி.	21-00
24.	எசு. அருளபாரி, தாம்பரம்.	50-00
25.	இ. குணத்தொகையன், குரோம்பேட்டை.	100-00
26.	தி. வே. தளபாள பூபதி, திண்டுக்கல்:	5-00
27.	மருத்துவர். இ. இராமச்சந்திரன், கரூர்.	201-00
28.	தமிழின விடுதலைக் கழகம், மயிலாடுதுறை.	25-00
29.	வே. கொ. வெற்றிச் செல்வன், சென்னை.	500-00
30.	தென்மொழி. ப. முருகவேள். சென்னை.	100-00
31.	கோ. நக்கீரன். சோழலிங்கபுரம்.	50-00
32.	செம்பியன் வல்லத்தரசு, சென்னை:	100-00
33.	கதிர் நிலவன், வேலூர்.	50-00
34.	எசு. முருகானந்தம், எண்ணூர்.	10-00
35.	சி. சுப்பிரமணியன், எண்ணூர்:	25-00
36.	இராம. அரங்கண்ணல், சென்னை-18:	100-00
37.	மு. பரமசிவம், விளாமுத்தூர்.	20-00
38.	செல்வா, பெரம்பூர். (அவர்கள் வழி)	150-00
39.	வழக்கறிஞர். நா. நல்லப்பன், சென்னை	50-00
40.	பேரா. க. வெள்ளைவாரணனார், சிதம்பரம்.	10-00
41.	வழக்கறிஞர். பொன்னழகன், சென்னை-50.	50-00
42.	மு. உலகமுதல்வன், திருவண்ணாமலை:	30-00
43.	துரை. இருட்டிணமூர்த்தி, புரசால்: (அவர்கள் வழி)	64-00
44.	மு. இரா. தியாகராசன், சென்னை:	2-00
45.	இ. சீவா, சென்னை.	1-00
46.	சூடிஞ பிரான்சிசு, சென்னை.	1-00
47.	பார்வதி, சென்னை.	1-00
48.	மு. முரளி. தியாகராயர் கல்லூரி, சென்னை.	5-00
49.	மா. இ. தமிழ்த்தம்பி, சென்னை:	1-00
50.	மா. த. கிள்ளிவளவன், சென்னை:	5-00
51.	கங்கையம்மன் கோயில் தெரு, கூட்டுறவுக் கடை.	10-00
52.	பார்த்தசாரதி தெரு, கூட்டுறவுக் கடை.	10-00
53.	தி. ப. கு. தெரு, கூட்டுறவுக் கடை:	10-00
54.	த. தமிழினை, சென்னை.	4-00
55.	வீ. இறைநம்பியன் திருக்கழுக்குன்றம்	100-00
56.	குமரிச் செல்வன், நாகர் கோயில்.	25-00
57.	சே. கணேசன், ஈரோடு.	25-00
58.	ஆ. தங்கவேல், பேட்டைவாய்த்தலை.	5-00
	மொத்தம்	4569-50

(தொடரும்)

அனைத்து நிலைகளிலும் தில்லி வஞ்சிக்கிறது

(சென்ற இதழ் தொடர்ச்சி)

திபி 2017, சிலை, 12,13 (காரி, ஞாயிறு) [1986 திசம்பர் 27, 28] ஆகிய நாள்களில் சென்னை, பெரியார் திடலில்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் நடத்திய,

தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு செய்திச் சுருக்கம்!

(நம் சிறப்புச் செய்தியாளர்: அசென்.)

நம் இன விடிவுக்கு விடுதலைக் கொள்கையே ஏற்றது; உறுதியும் இறுதியுமானது என நாம் அறுதியிட்டு வைத்திருந்தாலும், இக் கருத்தைப் பற்றி இவ்வினத்தைச் சேர்ந்த - இவ்வினத்தைக் காத்திடக் கங்கணம் கட்டிக் கொண்டு முழக்கமிடும் மற்ற தலைவர்களும் அவர்வழித் தொண்டர்களும் மற்றும் இந் நாட்டுக் குடிமக்கள் என்ற வகையில் முழுப்பொறுப்பினவர்களான பொதுமக்களும் தங்களின் தெளிவான எண்ணங்களை வெளிப்படுத்துவதோடு தேர்ந்த செயற்பாட்டு வழிமுறைகளையும் வகுத்தளிக்க முன்வருவார்களேயானால், அவற்றை ஏற்று இணைந்து செயல்பட ஒரு நல்வாய்ப்பை உருவாக்கும் ஆக்கவழிச் சிந்தனையுடன் கூட்டப்பெற்றதே இக் கருத்தரங்காகும்.

நம் கொள்கையினை வழிமொழிவோர்க்காகக் கூட்டப் பெற்றது இக் கருத்தரங்கு என யாரேனும் எண்ணிக் கொண்டார்கள் எனின் அதற்கு நாம் பொறுப்பாக முடியாது. நாம் விளம்பரம் செய்திருந்த அறிக்கைகளும் சுவரொட்டிகளுமே இதற்குப் போதிய சான்றுகளாகும்.

எதிர்க்கருத்தினரும் சார்புக் கருத்தினரும் ஒன்றிணைந்து செயல்நிலையில் கூட வேண்டும் என்பதே கருத்தரங்கின் அடிநிலை நோக்கமாகும். அன்றியும் இணைந்தாற்ற இயலாதென்பாரும் தத்தம் வழியில் தமிழின விடிவுக்கு - விடுதலைக்கு - முனைந்து உழைத்திட நிமிர்ந்தெழுந்து கிளர்ந்திருப்பாராயின் அதுவே கூடக் கருத்தரங்கால் விளைந்த நற்பயன் என்று கூற முடியும்.

இவ்விடத்தில், இக் கருத்தரங்கு கூட்டப்பெற்றுள்ள காலச் சூழல் கருத்தில் இருத்த வேண்டிய முகாமையான செய்தியாகும்.

இந்தியத் தேசியக் கட்டமைப்புப் போர்வை, பல முனைகளிலும் கிழிசல் விட்டுக் கந்தையாகிக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில், அக் கிழிசல்களை வலிந்த நூல் கொண்டு கூர் ஊசிகளால் தைப்பது போல் - அடக்குமுறைகளும் கொடுங்கோன்மை நெறிகளும் கட்டவிழ்த்து விடப் பெற்றுள்ளன.

அரசின் செங்கோன்மை நிலைத்திட, அறங்கூற வேண்டிய நெறிமன்றங்கள் தம நிலைகுலைந்து, ஆளும் அரசியலாரின்-பதவி நாற்காலிகளில் தற்காலிகமாக அமர்ந்து தலைதடுமாறி ஆடிக் கொண்டிருக்கும் தந்நலக் கொடியவரின் நாச்சுளிப்புகளையே தீர்ப்பாக அளிக்கின்றன.

அன்றுடம் நம்மை வாழ்வித்துக் கொண்டிருக்கும் அருமைத் தாய்மொழியினை அழித்தொழிக்கும் நோக்கில் செயல்படும் அரசின் போக்கிற்கு எதிர்ப்புக் காட்டும் வகையில் இந்திச் சட்டத்திற்கு எரிப்புக் கூட்டிய நம்மவர் இருபதாயிரத்திற்கும் மேல் நடுக்கும் சிறைக் கொடுமையால் நலிந்து கொண்டிருக்கின்றனர்.

மக்கள் நலம் கருதிச் சட்டம் இயற்ற மன்றம் சென்றவர்கள், ஏற்கனவே உள்ள குருட்டுச் சட்டங்களால் பதவிப் பறிப்புக்கு ஆளாகின்றனர்.

போக்குவரத்து ஊர்திகள் அனைத்தும் 'வெடிகுண்டு அச்சத்'தால் கலங்கிய வண்ணம் நகர்கின்றன.

செலவு மேற்கோள்வோர் (பயணிகள்) தீவிர ஆய்வுக்கு உட்படுத்தப் படுகின்றனர். சிறு பையானாலும், பெரும் பெட்டியானாலும் ஐயக் கண்ணோடு பார்க்கப் பெறுகின்றன. அரசின் உத்தரவுகளைப் பயன்படுத்திக் கொண்டு பொது நிலையிலும் தனி நிலையிலும் காவல் துறையினரால் பழிவாங்கும் நடவடிக்கைகள் பரவலாக- நயன்மை அறவே திரிந்த நிலையில - மேற்கொள்ளப் பெறுகின்றன.

அரசு செய்யும் மக்கள் நலச் செயல்கள் மட்டுமே விளம்பரம் செய்யப்பெற்று வந்த நிலை மாறி, அரசின் அச்சுறுத்தல்களே பல்வேறு வடிவில் அரசினால் விளம்பரப்படுத்தப் பெறுகின்றன.

இத்தகைய காலச் சூழலில், தமிழின நலம் நாடும்-தமிழின நலக் கருத்தைப் பேசும் - தமிழக அறிஞர்கள், அரசியல் தலைவர்கள், எழுத்தாளர்கள், தொழிலாளர் தலைவர்கள், மாணவர் தலைவர்கள் முதலிய அனைத்துத் தரப்பினர்க்கும், தங்கள் கருத்துரைகளை வந்து வழங்கி ஆக்கவழிப்படுத்துமாறு கேட்டு அழைப்புகள் விடுக்கப் பெற்றன.

> "குடிநலம் கூட்டக் குழூஉறி யெழுந்தோர்
> தடிவலம் கண்டு தாமடங் கினரோ?" — என்னும்படி

யாக அச்சமே தம் வாழ்வு நலம் (!) எனக் கொண்டு அடங்கியும் ஒடுங்கியும் நெளிந்தும் சுழிந்தும் கரந்தும் கலங்கியும் இருக்கும் பலர் அழைப்பினை மதியாமல் இருந்து விட்டது வியப்பிற்குரிய ஒன்றன்று.

எனினும், இத்தகு வெருவந்த சூழலிலும், தம் பொருளியல் தாழ்ச்சிகளையும் உடல் நலத் தொல்லைகளையும் பொருட்படுத்தாமல்- எதற்கும் அஞ்சாமல் - வீறுகொண்ட வேங்கைகளாய், மாறு கொண்டாரை மண்ணுள் புதைக்கும் எண்ணத் திண்ணத்தினராய், தொலைவிடங்களிலுள்ள சிற்றூர்களிலிருந்தெல்லாம் வந்து குழுமிய செந்தமிழ் மறவர் தம் ஒள்ளிய உணர்வையும் தெள்ளிய அறிவையும் உள்ளகத் துணிவையும் யாரே அளக்க வல்லார்?

'தமிழினத்தின் விடிவுக்கு வழியுண்டா?' என்ற ஏக்க வினவுக்கு எழுச்சி விடையளிக்கும் வண்ணம் கருத்தரங்குத் தொடக்கத்தின் முதல் நாளிலேயே அவர்கள் வந்து சேர்ந்த வண்ணமிருந்தனர்.

நம் தொண்டர்கள் அவர்களுக்கு வழிகாட்டியும் இயன்ற வசதிகளைச் செய்துகொடுத்தும் உதவினர்; மறுநாள் கருத்தரங்கு மேடையில் செய்யப்பெற வேண்டிய ஒழுங்குமுறை ஏற்பாடுகளையும் கவனித்துக் கொண்டனர்.

27-12-86 காலையில் நிகழ்ச்சி தொடங்கு முன்னரே உ. த. மு. க. முதல்வரும், மற்றும் அமைப்புக் குழுவினரும் பெரியார் திடலை வந்தடைந்தனர். மேலும் வெளியூர் அன்பர்கள் வந்து சேர்ந்து கொண்டேயிருந்தனர்.

'வெள்ளம் போல் தமிழர் கூட்டம்' எண்ணிக்கையளவில் காணப்பெறவில்லை; எனினும் எண்ண எழுச்சியில் **'வீரங்கொள் கூட்டம்'**- வினைபடத் துடிக்கும் **கூட்டம்** - வீறுகொண்டு குழுமியது.

காலை 10 மணி முதல் திருவாளன்மார் குழந்தை **ஈகவரசனும், தென்மொழி நா. இளமாறனும்** செந்தமிழூரஞ்சான்ற கொள்கைப் பாடல்களை இசையுடன் முழங்கினர்.

10-30 மணியளவில் அறிஞர்கள் பங்கேற்ற முதல்நாள் கருத்தரங்கின் முற்பகல் அமர்வு தொடங்கியது. பெரியார் சிந்தனையாளரும் பகுத்தறிவு நெறியினரும் ஆகிய **மணப்பாறை திரு. இனியனார்** தலைமையேற்றார். **திருவாட்டி. தேன்மொழி அருளி, 'அன்னை மொழியே'** என்னும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார். உ. த. மு. க. துணைப் பொதுச் செயலாளர் **திரு. தென்னவன்கோ** அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்.

தலைவர் **திரு. இனியனார்** இந்தக் கருத்தரங்கு, தந்தை பெரியார் திடலில் கூடியிருப்பது பொருத்தமானது எனவும், தமிழின் வழிகாட்டி பெரியார் தோன்றியிராவிட்டால் தமிழன் தன்னைத் தமிழன் என்றே கூறிக்கொண்டிருக்க முடியாது எனவும், தமிழின - தமிழ்நாட்டு விடுதலை பெரியார் தந்த உயிர்க்கொள்கை என்பதையும் சுட்டிக் காட்டி விளக்கிப் பேசினார்.

அடுத்து, கருத்தரங்கின் நோக்கம், சிறப்பு பற்றி விளக்கவுரையாற்ற எழுந்த உ. த. மு. க. முதல்வரும், கருத்தரங்க அமைப்பாளருமான **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களுக்கு, பள்ளப்பட்டி, புலவர் **திரு. எழில்வாணன்** பொன்னாடை போர்த்தி மகிழ்ந்தார்.

பாவலரேறு அவர்கள், **மக்களின் கருத்தை அறிய அமைக்கப் பெற்றதால் இக் கருத்தரங்கு வரலாற்றுச் சிறப்புடையதெனவும்**, அரசியல்காரர்கள் தத்தம கருத்துகளை மக்களிடம் திணிக்கின்ற நிலை கூடாதெனவும், மக்கள் அறியாதவரோ உணர்வில்லாதவரோ அல்லர், அறிவு எவ்விடத்தும் தோன்றலாம் ஆதலால் மக்கள் கருத்தை உண்மையாய் அறிந்து நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் விளக்கினார். இன்றைய தமிழினத்தின் நிலையினைச் சுட்டி அது தன்னை ஈடேற்றிக் கொள்ள இக் கருத்தரங்கில் எவ்வகையில் தீர்மானம் செய்தல் வேண்டும் என்பதையும் விளக்கி, அறிஞர்தம் உரைகளைக் கேட்டும் சிந்தித்தும் தம் கருத்தினை ஒப்போலை வழி அறிவிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்,

(இக்கால், கருத்தரங்கு தொடங்குகையில் இருந்த கூட்டம் இருமடங்காகியிருந்தது.)

அடுத்து, சிறப்புச் சொற்பொழிவாளரும் 'எழுகதிர்' இதழாசிரியரும், தமிழின மேம்பாட்டுக்குழைக்கும் திறமறவருமான **திரு அரு கோபாலன்** அவர்கள் தம விளக்கமான கருத்துரையினை வரலாற்று நடைமுறை அரசியலாய்வுடன் வழங்கினார். அவர் உரையாற்றுகையில் முதலில் இந்தியத் தேசிய நீரோட்டம் பற்றி விளக்கிப் பேசும் நோக்கத்துடன், "இத் துணைக்கண்டத்தில் பன்னூறு ஆண்டுகளாக மக்களை **மேய்த்தே** வாழுகின்ற கூட்டத்தின் தனி நலன்களைக் காத்துக் கொள்வதுதான் இந்தியத் தேசியம். இந்தியத் தேசியச் சித்திரத்தில் காட்டப் படுபவர்கள் இராசகோபாலாச்சாரி... முதலிய **தனிச் சாதியாரே** வங்காளம் மற்றும் பல்வேறு மாநிலங்களிலும் இந்தியத் தேசியத் தலைவர்களாகக் காட்டப் படுபவர் எல்லாரும் ஒரு சாதியினரே. இந்தியத் தேசியம் எனபது பார்ப்பனிய தேசியம். தில்லியமைச்சரவைப் பட்டியல்களை எழுதிப் பார்த்தால் 60 விழுக்காடு ஒரே சாதியினைச் சேர்ந்தவர்களாகவே இருப்பர் சில மாநில அமைச்சரவைகளும் அப்படித்தான். தலைமையமைச்சர்கள் மிகப் பெரும்பாலாரும் அச்சாதியினரே. சனதா அரசின் தோல்விக்குக் காரணம பிராமண தேசியக் கொள்கையே; **செகசீவன் ராமைத்- தகுதியிருந்தும்- தலைமையமைச்சராக வர** விட்டார்களா? இந்தியாவின் படைத்துறைச் செலவு 10,000 கோடியாம். இது உண்மையெனில், ஈழத்தைக் காக்கப் படை வர வேண்டாமா? இங்கே- மாநில அரசில் -ஊடாடிக் கிடப்பது நடுவணரசே. இந்தி படித்தால் தமிழன் வெளிமாநிலங்களில் சென்று வேலை பார்க்கலாமாம். தமிழ்நாட்டில் தமிழரல்லாதார் எத்தனைப் பேர் வேலை பார்க்கிறார்கள்? மற்ற மாநிலங்களில் தமிழன் கூலியாய், பன்றிகளோடு வாழ்கின்றான்; இங்கே - தமிழ் நாட்டில் - மாநில அரசு தரும் பணத்தில் நடைபெறும் தொழிற்பேட்டைகளில் பணிபுரியும் 60 விழுக்காட்டினர் தமிழரல்லாதவரே. தமிழ்நாட்டில் - கலைஞர் கருணாநிதி நகரில்- அறிஞர் அண்ணா நகரில்- தமிழன் கட்டிய கட்டடங்களில் பிற மாநிலத்தவர் வாழ்கின்றனர்; ஆனால் தமிழன் தெருவிலே 'சாய்கடையிலே வாழ வேண்டி உள்ளது. தமிழ்நாட்டிலேயே தமிழனை அலையவிடுகிற இந்தியத் தேசிய நீரோட்டம் நமக்குத் தேவையா?" என்று விளக்கி வினவெழுப்பினார். அவர் மேலும் மாநிலத் தன்னாட்சிக் கொள்கையை விளக்கிப் பேசுகையில் இந்தியத் தேசியக் கருத்துக் கொண்டுள்ள தமிழகத் தலைவர்கள் தங்களுக்கேற்ப வகுத்த திட்டமே மாநிலத் தன்னாட்சி (சுயாட்சி) மாநிலத் தன்னாட்சி என்பது கூட நடுவில் ஆள்பவர்கள் தங்களைப் புனிதர்களாகக் காட்டிக் கொள்ள வசதியாக இருக்கிறது எல்லா விலைவாசிகளுக்கும் நடுவணரசே காரணம்; எனினும் பஞ்சம் என வரும்போது நாட்டு மக்கள் மாநில அரசின் மீதே பாய்கின்றனர். நடுவண் அமைச்சர்கள் தப்பித்துக் கொள்கின்றனர். ஈழப் போராளிகளின் நிலை, நடவடிக்கை எதுவும் நடுவண் அரசுக்குத் தெரியாமலா நடக்கிறது? தெரிந்திருந்தும் மாநில அரசின் மீதே பழி கூறுகிறது. **மாநிலத் தன்னாட்சி என்பது ஒரு மாயை; ஒரு பிள்ளை விளையாட்டு**" என்று விளக்கினார்.

இறுதியாக அவர், தனியாட்சி பற்றிப் பேசும்போது, 'இன்றைய இந்தியாவிலேயே தமிழகத்துக்குத்தான் விடுதலை உடனே தேவைப்படுகின்றது. தமிழ்நாட்டில் 30 விழுக்காட்டினர் பிறமொழி பேசுவோர் உள்ளனர். அவர்களும் சேர்ந்தே தமிழ்நாட்டார் 'தமிழன்' என்று சொல்லி அவர்களையெல்லாம் ஒதுக்கப்பார்ப்பதாக 'சோ' எழுதுகிறார்; எல்லா மாநிலங்களிலும் பிற மொழியினர் உள்ளனர். ஆனால் தமிழ்நாட்டின் நிலை "கரையான் புற்றெடுக்க கருநாகம் புகுந்ததுபோல்" ஆயிருக்கிறதே! கருநாடகத்தில் கோலார் மாவட்டத்தில் 80 விழுக்காட்டினர் தமிழர்; பம்பாய் தாராவில் தமிழரே மிகுதியானவர்; அங்கெல்லாம் தமிழர்பகுதிகள் தமிழர்வயம் இல்லையே! இந்நிலை முற்றிக் கொண்டே போனால் தமிழ் எதிலி(அகதி) தோன்றுவான் இலங்கையிலேனும் யாழ்ப்பாணம் தமிழனுக்கே உரியது! ஆனால் இங்கு எங்கும் அதுபோன்று இல்லையே!" "தமிழகச் சட்டமன்றத்தையே விலைக்கு வாங்கும் அளவுக்குச் சென்னையில் மார்வாடி முதலியோர் வளர்ந்துள்ளனரே! இறுதியாக உறுதியாகத் தமிழனுக்குத் தனி நாடே தேவை." என்னும் உறுதியோடு முடித்தார்.

தொடர்ந்து, மார்க்சிய அறிஞர் திரு. **எசு. என். நாகராசன்**, மக்கள் எழுச்சிக்கும புரட்சிக்கும விடுதலைக்கும் மார்க்சிய நெறி நல்லதோர் வழிகாட்டும் இலக்கணமாய் அமைந்துள்ள பாங்கினை விளக்கிப் பேசினார்.

தலைவரின் முடிவுரைக்குப்பின் முதல் நாள் முற்பகல் அமர்வு நிறைவடைந்தது.

அன்று (27-12 86) பிற்பகல் அமர்வு மாலை 3-30க்குத் தொடங்கியது. தலைவராக, மயிலாடுதுறை வழக்கறிஞர், தமிழின விடுதலைக்கழக அமைப்பாளர் **திரு. இராமதாசு** அவர்கள் அமர்த்தப் பெற்றார்.

அவர் தம் சிறப்புவாய்ந்த முன்னுரையில், சட்டம், தேசம், அரசு, மக்கள் உரிமை பற்றிய அருமையான கருத்துகளை எடுத்து விளக்கினார். அவர் தம் உரையில் மேலும் வெளிப்படுத்திய சில கருத்துரைகள்: உலகமெல்லாம் தமிழ்மக்கள் வாழ்ந்தாலும் மிகப் பெரும்பாலோர் இழிந்த நிலையிலேயே வாழ்கின்றனர். தமிழினம் அழிந்து போனது; எனினும் அது தன் மொழியைக் காப்பாற்றிக் கொண்டது.

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க)

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் இந்த அடிமை வாழ்க்கை அவனுக்குத் தேவைதானா? தமிழன் சிந்திக்க வேண்டும்.

தமிழன் சிந்திக்கும் நேரம் வந்துவிட்டது. தமிழன் சிந்திக்கத் தொடங்கிவிட்டான்.

தமிழ் மக்களுக்குத் தாங்கள் தமிழர்கள், என்ற இன உணர்வு வர வேண்டும்.

ஐந்து கோடித் தமிழ் மக்களும், வீறு கொண்டு விடுதலைப் போருக்கு எழவேண்டும். தமிழின விடுதலைக்குப் போர்க்குரல் கொடுக்கும் "உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தலைவர் பாவலரேறு அய்யா" அவர்கள் தலைமையில் அணி வகுக்க வேண்டும். தமிழர் படை போருக்குப் புறப்பட்டால் வெற்றி உறுதி.

வெற்றி நமதே. வாழ்க தமிழ்! வெல்க தமிழக விடுதலைப் போர்! (முற்றும்).

பொதுமக்கள் உணரவில்லை; உணர்ந்தவர்கள் போராட்டத்திற்கு முன்வரவில்லை! விடிவென்ன?

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

'சட்டம், எழுதிய போதே மோசடி'' என்றார் பெரியார். 'இந்தியா ஒரு நாடு' என எந்தச் சட்ட வல்லுநரும் ஒத்துக் கொள்வதே இல்லை; இது நாடன்று; ஒரு துணைக்கண்டம், இதை நாடென்று கூறுவதைப் போன்ற பல ஏமாற்றுகளை ஒத்துக் கொள்ளும் முட்டாள்களாகவே நாம் இருக்கிறோம். மாநில எல்லை முதலியவற்றில் மாறுதல் நடத்த மக்களில் 'எளிய பெரும்பான்மை' (Simple Majority)யினராலேயே இயலும் என அரசியல் சட்டம் கூறுகிறது. சட்டம் மக்களுக்காகவே! இந்திய அரசியல் சட்டம் அடிப்படைக் கோளாறுகள் பல அமைந்தது. இங்கே, மக்கள் அரசு நடைபெறவில்லை; விலங்கு அரசு நடைபெறுகிறது. (சங்கராச்சாரி, ஆ (பசு) வுக்குத்தானே காப்புச் செய்கிறான்).

''**நமக்கு - நம் (தமிழினத்தின்) எதிர்காலத்தினைத் தீர்மானிக்க உரிமையுண்டு. ஒரு மக்கள் பகுதியும், அது நீண்ட காலம் ஓர் எல்லைக்குள் வாழ்ந்திருத்தலும், அங்கு ஒரு மொழி பேசப்பட்டு வருதலும், அது தன்னைத் தானே ஆளும் இறையாண்மை உடையதாயிருத்தலும்** ஆகிய நான்கு கூறுகளும் கொண்டதே ஒரு தேசம் எனப் பெறும்.'' தேசம் என்பது ஒரு நிலையான மக்கள் குமுகம்; அஃது ஒரு மொழியின்றி இருக்க முடியாது. மாந்தனை விலங்கினின்று பிரிப்பது மொழி; அம் மொழி அடிப்படையில் நாகரிகப் பண்பாட்டுக் கூறுகள் அமைத்துக் கொள்ளப் பெறுகின்றன; **மொழியை அழித்து விட்டால்** அம்மொழி பேசும் நாட்டை அழித்து விடலாம்.'' என்று தேசம் பற்றி **இலெனின்** விளக்கியுள்ளார்.

ஒரு நாடு பிரிவினை கேட்கப் பல **காரணங்கள் இருக்கலாம்; ஆனால் ஒரே ஒரு காரணம் - அது - மொழியடிப்படையில் இருக்குமேயானால் அதுவே போதும்** என்று **'ஆக்சுபோர்டு'** குழு ஒன்று பிரிவினை கருத்து தோன்றும் நாடுகளுக்குச் சென்று திரட்டிய கருத்துத் தொகுப்பில் சுட்டிக் காட்டுகிறது.

''தேசிய இனம் மற்றும் **தனி நாடு** பற்றி நேருவின் Discovery of India-வும் Selected works-ம் மற்றும் கூட்டுச்சேரா இயக்கம் பற்றிய 'பெல்கிரேடு முதல் தில்லி வரை' என்ற நூலும் காட்டும் கருத்துகள் தனி உரிமை கேட்கும் இன நாடுகளுக்கு ஆதரவாகவே உள்ளன'' என்பதை அந் நூல்களினின்று மேற்கோள்களை எடுத்துக் காட்டி விளக்கிப் பேசி முடித்தார் அவர்.

தொடர்ந்து பேசிய வழக்கறிஞர் **திரு பாலகோபால்,** ''பதவி வரும் வரை தமிழினம்! தமிழினம்! என்பவர்கள் வந்த பின் தன் சொந்தக்காரன், சாதிக்காரன் என்று பார்க்கத் தொடங்கி விடுகிறார்கள். பிராமணரல்லாதவன் (Non Brahmin) என்று சொல்வது வெட்கமில்லையா? தமிழன் என்று சொல்லக் **கூடாதா?''** என இது போலும் உணர்ச்சி மிகுந்த தொடர்களால் தமிழனின் தன்னுணர்வற்ற நிலையைச் சாடினார்.

பின்னர், அரக்கோணம் திரு. **சோ. சு. யுவராசு** பேசுகையில், 'இந்திய அரசியல் சட்டத்தை ஏற்றுக் கொண்ட - மதிக்கின்ற - எவரையும் தமிழன் என்றே மதிக்கக் கூடாது; நாம் துண்டு துண்டுக் கட்சிகளாகப் பிரிந்து இயங்குவதனாலேயே எதிரிகள் வலுப்பெற வாய்ப்புகள் ஏற்படுகின்றன. அதனால் நாமெல்லாம் ஒன்றிணைந்து - ஐக்கிய முன்னணி அமைத்தல் வேண்டும்' என்று வலியுறுத்தினார்

தஞ்சாவூர், **மருத்துவர் செல்வம்** தம் உரையில் வாழ்ந்த தமிழன், வாழ்கின்ற தமிழன் நிலைகளையெல்லாம் எடுத்து விளக்கி வாழப் போகும் தமிழனுக்கு விடுதலைத் தேவையின் காரணங்களை விளக்கினார்.

வேட்டாங்குளம், திரு. **மா. செ. தமிழ்மணி,** 'வாழ்வுக்கான ஏந்துகள் மேல்தட்டினர்க்கும் போல அடிநிலையினர்க்கும் வந்து சேர வேண்டும்; அதற்கு விடுதலை பெற்ற தமிழகம்தான் வாய்ப்பாக இருக்கும்' என்றார்.

பல்லடம் **திரு. ந. முத்துக்குமரனார்** பேசுகையில், 'குமுகாய, மொழிநிலைச் சிந்தனையாளர்களை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்களை நாம் பின்பற்ற வேண்டும்', என விளக்கினார்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளும் ஒருவர், எங்கோ இருக்கின்ற கறுப்பர் இனத்திற்காக இரங்குவதை, வருந்துவதை, கவலைப் படுவதை உண்மை என்று ஒப்ப முடியுமா? எனவே இஃது இராசீவ் காந்தி ஆடும் அரசியல் நாடகங்களிலேயே தலையாயது.

இனி, **அவர்** இலங்கைத் தமிழர்கள் சார்பிலாடும் ஒப்புரவு (**சமாதான**) நாடகம் இன்னும் வேடிக்கையானது; **கரவானது;** மிகக் கொடுமையானது. இலங்கைத் தமிழர்களை இவர் மக்களாகவே கருதவில்லை. ஏனென்றால் அவர்கள் தமிழர்கள். இந்த இந்திய நாட்டிலேயே திருவாளர் இராசீவ் காந்தி இனத்தவர்களுக்கு ஆகாத இனம் **இந்தத் தமிழினம்** ஒன்றுதான். இதை இந்த நாட்டின், மக்களின், வரலாறு நன்கு தெரிந்த அனைவருமே நன்கு உணர்வர். எனவே இராசீவ் காந்தி கறுப்பு ஆப்பிரிக்க நீக்ரோ இனத்தை விரும்பினாலும் விரும்புவார்; தமிழர்கள் முன்னேறுவதையோ அவர்கள் அரசியல் மீட்சி பெறுவதையோ என்றைக்கும் எந்த நிலையிலும் விரும்பமாட்டார். இன்னும் சொன்னால் **அவரின்** சொந்த இனமான பார்ப்பன இனத்திலேயே கூடத் தமிழ்நாட்டுப் பார்ப்பனர் என்றால் **அவருக்குப்** பிடிக்காது. இதற்கு, இவர் பாட்டனார் நேரு, இராசாசி, டி. டி. கிருட்டிணமாச்சாரி முதலியோரிடமும், இவர் தாயார் இரா. வெங்கட்ராமன் முதலியோரிடமும், இவர் இக்கால் வெளியுறவுத் துறைச் செயலாளர்களாக இருந்த பார்த்தசாரதி, வெங்கடேசுவரன் ஆகியோரிடமும் நடந்து கொண்ட அரசியல் அதிகார நடைமுறைகளே சான்றுகளாகும். எனவே, இப்படிப் பட்ட வடநாட்டுப் பச்சைப் பார்ப்பனப் பரம்பரையின் வெளிப்பாடாக உள்ள திரு. இராசீவ் காந்தி இலங்கைத் தமிழர் மேல் அக்கறை கொள்வார் என்பதும் அன்றும் இன்றும் என்றுமே நம்பிக்கைக் குரியதன்று. இவ்வுண்மையைத் திம்புப் பேச்சு தொடங்கிய போதும், அதைத் தொடர்ந்து, திவாரிகளும், பண்டாரிகளும், பார்த்தசாரதிகளும், சிதம்பரங்களும் பேச்சுரை நடத்த இலங்கைக்கும் தில்லிக்கும் மாறி மாறி நடைபோட்டு வந்த போதும் **'தமிழ்நிலம்'. 'இப்பேச்சுகள் வெறும் அரசியல் கண்துடைப்பு நாடகங்களே',** என்றும், **'இவற்றால் ஒரு பயனும்** விளையப் போவதில்லை' என்றும், **'இவை செயவர்த்தனே** அரசு தன்னை வலுப்படுத்திக் கொள்ள ஏற்படுத்தித் தரும் கால இடைவெளியே' என்றும் தெளிவாகக் கருத்தறிவித்தது. இதைப் போராளிகள் உட்பட முன்னுணர்வில்லாத நம் தலைவர்களும் கண்டு கொள்ளவே இல்லை.

இப்பொழுதோ நெருக்கடி முற்றிய நேரம். இலங்கைப் போராட்டம் தொடங்கி ஏறத்தாழ நான்கு ஆண்டுக் காலத்தை, இந்திரா காந்தியும், இராசீவ் காந்தியும், திட்டமிட்டு, இலங்கையரசுக்கு விட்டுக் கொடுத்து இலங்கைத் தமிழர்களில் ஏறத்தாழ எண்ணாயிரம் பேர் அழிந்து போகக் காரணமாயினர்.

இலங்கைத் தமிழர் சிக்கலைக் கையில் எடுத்த போதே செயவர்த்தனாவோ, தமிழீழப் போராளிகளோ என்ன கருதுகிறார்கள் என்று தெரிந்து கொள்ளாமலேயே இராசீவ் காந்தி, **'தமிழீழத்தை இந்தியா ஆதரிக்க முடியாது'** என்று வெளிப்படையாகத் தெரிவித்தார்.

தென்னாப்பிரிக்க இனவெறி வெள்ளையரசின் கொடுமைப் பிடியிலிருந்து நமீபியா முதலிய நாடுகள் விடுதலை பெற வேண்டும் என்று விருப்பம் தெரிவிக்கிற இராசீவ் காந்தி, அரபியர்களின் கொடுமையிலிருந்து பாலத்தீனியர்கள் காக்கப் பெற வேண்டும் என்று கூறுகிற இராசீவ் காந்தி, சிங்கள இனவெறி அரசின் கொடுமைகளிலிருந்து தமிழீழம் விடுதலை பெறக் கூடாது என்று கூறுவதற்கு எனன காரணம் இருக்க முடியும்? தமிழினம் விடுதலை பெற்ற ஒரு தனியினமாக ஆகக் கூடாது என்று அவரும் அவரைச் சார்ந்தவர்களும் விரும்புவதுதான் அதற்குக் காரணமாக இருக்க முடியுமேயன்றி வேறு என்ன?

ஆப்பிரிக்கப் பொருளமைப்பின் உச்ச மாநாட்டில் தென்னாப்பிரிக்காவின் இனவெறி ஆட்சிக்குச் சில மேலை நாடுகள் உடந்தையாக இருப்பதை இராசீவ் கடுமையாகக் கண்டித்துள்ளார். ஆனால், இலங்கை இன அழிவுக்குக் கனடா, இசரேல், பிரிட்டன், பாக்கித்தான், அமெரிக்கா முதலிய நாடுகள் துணை போவதைக் கண்டித்து ஒரு பேச்சும் பேசவில்லை. அதே போல் தென்னாப்பிரிக்க நிறவெறி அரசின் பொருளியல் முற்றுகையை எதிர்த்து முன்னரங்கு நாடுகள் போராட வேண்டும் என்று அறிவித்த இராசீவ் காந்தி யாழ்ப்பாணத்துக்கு எதிராகச் செயவர்த்தனே அரசு செய்யும் கடும பொருளியல் முற்றுகையைக் கண்டித்து ஒன்றும் பேசாதற்கு என்ன காரணம்? ஆப்பிரிக்க மக்களுக்குக் காட்டும் கரிசனம் தமிழீழத் தமிழர்களுக்கு ஏன காட்டப் பெறவில்லை. ஆப்பிரிக்க மக்களுக்கு 52 கோடி உருபா பொருளுதவியை அறிவித்த இராசீவ் தமிழீழத் தமிழர்களை ஏன் அழிந்து போக விட்டு விட்டார்.

எனவே, இராசீவ் காந்தியின் இவ்வேறுபாடான கரவான நடைமுறைகளைக் கண்டித்து, **உலகத் தமிழின முன்னேற்றக் கழக** அன்பர்களும், **தென்மொழி, தமிழ்நிலம்** அன்பர்களும் பிற அமைப்புகளைச் சேர்ந்தவர்களும், தலைமையமைச்சர் இராசீவ் காந்திக்கு உடனே கீழ்வரும் செய்தியைத் ஆங்கிலத் தொலைவரி வழியாக, நான்கைந்து பேர் சேர்ந்தோ தனித் தனியாகவோ கையெழுத்திட்டு அனுப்ப வேண்டும் என்றும், அவ்வாறு தொலைவரி கொடுத்த செய்தியைத் **தமிழ்நிலத்துக்கும்** தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். தொலைவரி ஆங்கிலத்தில் கொடுக்க வேண்டும். அதன் **தமிழ்** வாசகம்.

''**ஆப்பிரிக்க விடுதலைக்கு உதவுவது போல், ஒருபுறம் உலகை ஏமாற்றிக் கொண்டு, மறுபுறம் இலங்கைத் தமிழின அழிவை மறைமுகமாக ஊக்கப் படுத்தும் இராசீவ் காந்தியே, நீங்கள் தலைமையமைச்சர் பதவியை விட்டு உடனே நீங்குங்கள்.''**

இதன் ஆங்கில மொழி பெயர்ப்பும்
தொலைவரி விடுக்க வேண்டிய வாசகமும்!

''HONOURABLE PRIME MINISTER RAJIV GANDHI RESIGN YOUR POST FOR INDIRECTLY INDUCING THE GENOCIDE OF SRILANKAN TAMILS WHEN EVEN DISGUISING THE WORLD LIKE HELPING THE AFRICAN LIBERATION PEOPLES.''

—**பெருஞ்சித்திரனார்,**
உ. த. மு. க. முதல்வர்

(முதல் பத்தித் தொடர்ச்சி)

பின்னர், உ. த. மு. க. முதல்வர் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** தம் பேருரையினை வழங்கினார். (முழு உரையும் தனியே வெளிவரும்). நீண்ட காலம் நம்பிக்கையற்றிருந்த இனம் உடனே தன்னம்பிக்கை பெற இயலாது; பிறரையும் நம்ப முடியாது. அறியாமையிலிருந்த இனம் உடனே அறிவு பெற்று, எழுந்திட இயலாது. அவ்வினம் தன்னம்பிக்கை **பெற்று,** அறிவு பெற்று, செயல்பட்டு உரிமை வாழ்வு **பெறும்** வழி வகைகளை எங்ஙனம் ஆய்ந்து மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றி விளக்கிப் பேசினார்.

தலைவர் இறுதியுரையினைத் தொடர்ந்து திரு. மா. பூங்குன்றன் அனைவர்க்கும் நன்றி கூறினார்.

முதல்நாள் கருத்தரங்கில் அறிஞர்களின் தெளிவு சான்ற உரைகேட்ட அனைவரும், நெஞ்சில் புத்துணர்வும் சிந்தனையோட்டமும் கொண்டவராய்க் கலைந்தனர் என்பதை அவர்களின் முகங்கள் காட்டின.

(தொடரும்)

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதைக் கண்டு பொறுத்துக் கொள்ள முடியாத **எர்சாத்** இவருக்குப் பல வழிகளிலும் தொல்லை கொடுத்து அடக்கி விடலாம் என்று எண்ணிச் செயல்படுகிறார். ஆனால் இவர் அடக்குமுறை எவ்வளவு கூடுதலாகுமோ அதை விடக் கூடுதலான முறையில் மக்கள் போராட்டங்களும் வலுப்பெற்று வருகின்றன. **காசினாவசித்திற்கு** ஆதரவும் பெருகி வருகிறது. வங்கத்தின் இன்னுமொரு தலைவராகச் சுட்டுக் கொல்லப்பட்ட படைத் தலைவர் **சியாவுல் ரகுமானின்** மனைவி **சுலேதாசியா** விளங்குகிறார். இவரும் **காசினா வசித்தையே** ஆதரிக்கிறார். இருபெரும் பெண் அரிமாக்களும் நடத்தும் மக்கள் போராட்டம் வங்கத்திற்கு நல்ல விடிவைத் தரும் என்று வங்க மக்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். (முற்றும்)

உ. த. மு. க.-வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
- சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம் !
- இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல் !
- மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி !
- பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம் !
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை !

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்.
கழக அருட்கொடையாளர்கள் :
தென்மொழி ந. முத்துக்குமரன், பல்லடம்-மா. ஆறுமுகம்.

(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண்- 79 TN/MS (C) 657

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொலைபேசி எண்: 847829 3

உறுப்பினர் :
ஆண்டுக் கட்டணம் உரு. 44-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 22-00

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.